# புதுகைத் தென்றல்

சமுதாய, இலக்கிய, பண்பாட்டு மாத இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஜனவரி - பிப்ரவரி 2025 • ₹10


## புதுகை கம்பன் கழகச் செயலாளர் 'தமிழ்ச்செம்மல்' இரா.சம்பத்குமாருக்கு அஞ்சலி!



அருளாளர் இராம.வீரப்பன் அவர்களால் எப்போதும் 'பிரசிடெண்ட் குடும்பம்' என்று புகழப்பட்ட வல்லத்திராகோட்டை பிரசிடெண்ட் குடும்பத்திலிருந்து ஊராட்சித் தலைவராக மட்டுமன்றி ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவராகவும் இயங்கி தொண்டாற்றி வந்த திரு. சி. இராமச்சந்திரன் அவர்களின் மூத்த புதல்வரும் உயர்நீதிமன்ற மாண்பமை நீதியரசர் இரா.சுரேஷ்குமார் அவர்களின் சகோதரருமான இரா.சம்பத்குமார் 15.1.25 அன்று மதுரையில் இயற்கை எய்தினார். வல்லத்திராகோட்டையில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. புதுக்கோட்டை கம்பன் கழகச் செயலாளராகவும், திருவருள் பேரவைத் தலைவராகவும் திருக்கோவில்கள் பேரியக்கத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் வர்த்தகர் கழகக் கூடுதல் செயலாளராகவும் திகழ்ந்த சொல்லின் செல்வர், தமிழ்ச் செம்மல் இரா.சம்பத்குமார் அவர்களின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

# கடிதங்கள்



▪ **தளவை இளங்குமரன்,** இளஞ்சி

முன் அட்டையில் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் 85ஆவது பிறந்தநாள் விழாவும், இரண்டாம் பக்க அட்டையில் தேசிய உரிமை இயக்கம் சார்பான விழாவுடன், மின்னல் தமிழ்ப் பணி ஆசிரியர் கவிச்சுரபி சந்திரசேகரன் 59ஆவது பிறந்தநாள் விழாவும், பின் அட்டையில் முனைவர் சாரதா நம்பி ஆரூரன் அவர்களுக்கு விருது வழங்கும் விழாவும், செல்வி கு.தியானாவுக்குச் சான்றளிக்கும் நிகழ்வும் படங்களுடன் பளிச்சிட்டன. ‘காலத்தின் கட்டாயம்’ ஆசிரியர் அவர்களின் தலையங்கம், ஆறு அறுசுவைக் கட்டுரைகள், 33 கனிச்சுவை கவிதைகள், ஒரு சிறுகதை, படிக்க, சமைக்க, ருசிக்க, நான்கு நூல் மதிப்புரைகள், 16 கடிதங்கள் என்று பார்க்க வேண்டிய பல்சுவைப் பெட்டகமாய்ப் பரிணமித்தது நவம்பர் 2024 புதுகைத் தென்றல்.




▪ **பாவலர் தமிழ்வேலி,** வேலூர்

முனைவர் சாந்தா பாலகிருஷ்ணன் கவிதை, புதுக்கோட்டை அழகு நிலவார், தளவையார் கவிதைகள் மனத்தை ஈர்க்கும் வண்ணம் அமைந்தது. குழந்தைக் கவிஞரை நேருபிரான் பாராட்டிய செய்தி வியப்பகுரியதாக அமைந்துள்ளது. வாசகர் சார்பில் புதுகைத் தென்றல் ஆசிரியருக்கு வளம் மிகுந்த புத்தாண்டு வாழ்த்துகள்; தமிழர் திருநாள் பொங்கல் வாழ்த்துகள்.

▪ **கருமலைத்தமிழாழன்,** ஒசூர்

பள்ளிகளில் ஒழுக்கத்தை மாணவர்களுக்கு மட்டுமன்று, ஆசிரியர்களுக்கும் கற்றுத்தர வேண்டிய நிலை இன்றைக்கு வந்துள்ளது. எழுத்தறிவித்தவன் இறைவன் என்ற பழமொழி பழைய மொழியாகி மாணவர்களிடம் ஆசிரியரைக் கிண்டல், கேலி செய்வதோடு அடித்தளமான ஒழுக்கக்கேடு வளர்ந்து விட்டது. அதேபோல தன்னிடத்தில் பயிலும் மாணவர்கள் தம்முடைய குழந்தைகள் என்ற உன்னதமான எண்ணமும் மாறிவிட்டது. இதன் எதிரொலிதான் இன்றைய இருதரப்பின் ஒழுக்கக் கேடுகளும் இரு சாராருக்கும் மன அழுத்த ஆலோசனைகள் கொடுக்க வேண்டும். டியூஷன் நடத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும். காலம் கடந்த மாலை நேரம், விடுமுறை நாள்களில் தனி வகுப்புகள் நடத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும். அப்பொழுதுதான் இத்தகைய ஒழுங்கீனங்கள் தடுக்கப்படும்.

▪ **திருமதி சாந்தா** பாலகிருஷ்ணன், குமணன்துறை

குழந்தையே மானிட வாழ்க்கையின் மனிதச் சங்கிலி என்பதை மறந்து நாம்

நம் எதிர்கால சந்ததிகளுக்கு இழைக்கும் அநீதி என்பதை தலையங்கம் உணர்த்துகிறது.

காமராசர் அவர்களின் கூற்றான உழைக்காமலேயே மாதந்தோறும் மக்களுக்குப் பணம் கொடுத்தால் நாடு என்னவாகும் என்பது குறித்த விளக்கம் பொருளாதார வல்லுனர்கள் கூட சிந்திக்க இயலாது ஒன்று என்பது உண்மையான வார்த்தை.

'வானமும் நானும்' கவிதை மனதைத் தொட்டது. 'கையெனும் பெருந்தகை' கவிதையில் 'துட்டினை வாங்கும் கையூட்டுப் பேய்' என்னும் வரி சிறப்பானது. 'பணம் மட்டும் வாழ்க்கையன்று' கவிதை வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்த்துகிறது. 'அன்னையெனும் தெய்வம்' கவிதை போற்றி அஷ்டோத்ரம் போன்று சிறப்பாக உள்ளது.

'வணிக உத்தி' சிறுகதை வட்டிக்குப் பணம் வாங்குவது, தவணைப் பணம் வாங்குவது போன்று மிகவும் கடுமையாகக் காட்டியுள்ளது சிறப்பு. செவி நுகர்வோர் சிந்தனைகள் ஐம்பெரும் பூதச்சேர்க்கை என்பதைத் திருமூலர் திருமந்திரம் கூறி எளிமையாக எடுத்துரைத்த விதம் மிகவும் அருமை.

குழந்தை இலக்கியச் செல்வர் பி.வெங்கட்ராமன் அவர்கள் குறித்த கட்டுரை சிறப்பானது. அதிலும் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களின் பாடல்கள் அனிமேஷனில் வெளியிடப் பட்டவை குழந்தைகளுக்கான கருவூலமா கும். மொத்தத்தில் 2024 நவம்பர் மாத புதுகைத் தென்றல் இதழ் குழந்தைகள் தினமலராக மணம் வீசியது.

▪ **உரப்புளி நா.ஜெயராமன்**

நவம்பர் 2024 புதுகைத் தென்றலில் மாணவிகளுக்கு நேரிடும் பாலியல் வன்கொடுமை பற்றித் தெரிவித்ததோடு அதிலிருந்து விடுபட நெறிமுறைகள் வகுப்பது காலத்தின் கட்டாயம் எனும் உரிமையை எழுப்பியது தலையங்கம்.

ஏழைகளுக்கு உதவித்தொகை வழங்குவது பற்றிய காமராஜர் கருத்தை திரு கே.எஸ்.ரமணா தமது கட்டுரையில் தெளிவாகச் சொல்லியுள்ளார். இலவசமாக இன்று வழங்குவோரும், வாங்குவோரும் யோசிக்க வேண்டும் என்றது அக்கட்டுரை.

85ஆவது வயது காணும் நல்லி குப்புசாமி செட்டியாரின் நல்லியல்புகளில் தமிழ் இலக்கியங்களையும், படைப்பாளி களையும் போற்றுவது சாலச் சிறந்ததாய் தெரிகிறது. அவர் பல்லாயிரத்தாண்டு நீடூழி வாழ்க. ஈதலால் பொன்றாத புகழ் தோன்றும் எனக்கூறும் சி.பொன்ராஜ் கவிதைக்கு வாழ்த்து. கவிஞர் நவீன் குமாரின் 'வானமும், நானும்' கவிதை பலமுறை படிக்கத் தோன்றியது. உத்தமர் ஓமந்தூரார் பற்றி கவிஞர் மலர்மகன் எழுதி வருவது நிறையச் செய்திகளை கூறுகிறது. இவ்வாறாய்ப் பல்சுவை ஏந்தி வரும் புதுகைத் தென்றல் ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

▪ **ஆர்.ரெங்கராஜன்,** மதுரை

நவம்பர் 2024 இதழில் எனது 'குழந்தைகள் திரையிசைப் பாடல்கள்' நூலுக்கு மிகச்சிறப்பாக கவிமாமணி இளையவன் அவர்கள் விமர்சனம் எழுதிய இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். அவருக்கும், நூல் விமர்சனம் வெளியிட்ட தங்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

▪ **எழுத்தாணி அரிராசு,** காஞ்சிபுரம்

பொதுநலச் சேவகர் நல்லி குப்புசாமி அவர்களின் பிறந்தநாள் விழாச் செய்தி மிக அருமையாக உள்ளது. சுப. சந்திர சேகரன் போன்றோர் வண்ணப்படங்கள் மகிழ்ச்சியாக உள்ளன. காலத்தின் கட்டாயம் மற்றும் சிறப்பு மிக்க

கவிதைகள், கட்டுரை என தனிச் சிறப்பாக புதுகைத் தென்றல் வந்துள்ளது. சிறப்பான இதழைக் காண வழி செய்த ஆசிரியர் அவர்களுக்கு மனம் நிறைந்த நல்வாழ்த்துகள். நன்றி.

- **க.சண்முகம்,** திருவண்ணாமலை

புதுகைத் தென்றல் நவம்பர் இதழ் சிறுவர் தினவிழா மலராக மிளிர்ந்தது. நவபாரதச் சிற்பி நேருஜி பற்றிய கவிதை சிறப்பான அஞ்சலி. தன்னுடைய 85 ஆவது பிறந்த நாளில் புத்தகங்கள் வெளியிட்டு கொண்டாடியது மிகவும் சிறப்பு. சிறுவர் இலக்கிய உலகில் 75 ஆண்டுகால பங்களிப்பு பற்றிய காம்கேர்புவனேஸ்வரியின் கட்டுரை மிகச் சிறப்பான பிறந்தநாள் பரிசு. 90 வயதிலும் இளமையுடன் செயலாற்றும் அவருக்கு பிறந்தநாள் வணக்கங்கள்.

மற்றும் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா பற்றிய கட்டுரை மிகவும் ரசிப்பு.

நிறைய கவிதைகள், கதை, கட்டுரை, தொடர் என நவம்பர் இதழ் மிகவும் சிறப்புடன் மிளிர்ந்தது. பாராட்டுகள்.

- **புலவர் ந.ஞானசேகரன்,** திருலோக்கி

பணி நிறைவுற்றும் ஏழை மாணவர்களுக்கு உதவும் மணி, தவமணி, நவமணியாக நமக்குத் தெரிந்த பாடமாகிறார். பணத்தைவிட உழைப்பே மேலானதாக எடுத்துக்காட்டியுள்ள காமராஜர், உழைப்பின்றி ஒன்றும் இயங்காது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

புவனேஸ்வரி பி.வி.பற்றியும், அழ.வள்ளியப்பா பற்றியும் விவரித்து அவர்கள் பெருமைக்குக் கட்டியம் கூறுகிறார். ஓமந்தூரார் முதல்வர் பதவி போனதும் அயராமல் ஏகாந்தியாகி இரமணரையும், வள்ளலாரையும் குருவாக ஏற்று கருணாசிரமம் கண்ட செய்திகளை மலர்மகன் படைப்பு மணக்க,

- **பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

**புகழுடம்பில் வாழும் ஏசு**
**ஒருகன்னத் தில்அறைந்தால் மற்றொரு கன்னம்**
**விருப்பொடு காட்டென்ற ஏசு – பெருமான்**
**சிலரால் சிலுவையில் வைத்தரைய மாய்ந்தும்**
**நிலைத்தார் புகழுடம்பில் நின்று.**

- **முனைவர் இராம.வேதநாயகம்,** வ்டமாதிமங்கலம்

**குழந்தை வளர்ப்பைக் குதூகலமாய்ச் சொன்னீர்**
**அழகான வாசகம் அன்பாய் – வழிகாட்டல்**
**நன்றேதான் கண்டேனே நல்லநல்ல செய்திகள்**
**பொன்றாப் புகழுடன் தான்!**

இனிக்க எடுத்துரைக்கிறது. உலகம் இயங்குவது பஞ்சபூதங்களால். அதைப் போல உடலும் பஞ்சபூதங்களாலேயே இயங்குகிறது என்பதை விஜயலட்சுமி அம்மையார் புறநானூறு, திருமந்திரம் நூல்களைக் கொண்டு விளக்கியிருப்பது தனி சிறப்பு. ஜெயகாந்தனின் கவிதைகள் தமிழ் இலக்கியத்திற்கு வளம் மட்டுமல்ல, வலுவும் ஊட்டக்கூடியவையே என்பது உண்மை.

- **தங்க சங்கர பாண்டியன்,** சென்னை

புதுகைத் தென்றல் நவம்பர் 2024 இதழில் வெளியான 'காலத்தின் கட்டாயம்' தலையங்கம் வெகுசிறப்பு. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம். அதற்கு விரிவான ஆலோசனை நடத்தி வழிகாட்டுதல் நெறிமுறைகளை வழங்குவது அரசின் கடமை என்று அற்புதமாய் எழுதியுள்ளீர்கள். 'புறநானூற்றுப் புதையல்' பூவரசி மறைமலையின் சங்க இலக்கியங்களை மக்கள் புரிந்து கொள்ள எளிய இனிய எண்சீர் விருத்தப்பாக்களால் தமிழுக்கு ஆற்றும் தொண்டு மகத்தானது.

சென்னை ஆட்சி மொழிச் சட்டம் 1956 தீரரும் கர்மவீரரும் தொடர் 22 அருமையிலும் அருமை. பி.வி.பற்றிய காம்கோர் புவனேஸ்வரியின் எழுத்தோவியம் உண்மையிலே பாராட்டுக்கு உரியதாகும். இலக்கிய டைரியின் நடுப்பக்கம். 'குழந்தைகள் தினம்' பற்றிய தகவல் இனித்தது. 'பொன்றாப் புகழ்' சி.பொன்ராஜின் கவிதை சிந்தைக்கு விருந்தூட்டியது. நிறைய படைப்புகளை வெளியிடும் ஒரே இதழ் புதுகைத் தென்றல்தான். பாராட்டுகிறேன்.

- **நவீன்குமார்,** நடுவிக்கோட்டை.

கலை இலக்கிய விருதுகள் பெறும் பல்துறை ஆளுமைகளின் வண்ணப் படங்களையும், தகவல்களையும் தொடர்ந்து வெளியிட்டு சிறப்பு சேர்க்கும் புதுகைத் தென்றலின் இதழியல் பணி போற்றுவதற்குரியது. பாராட்டுகள்.

'காலத்தின் கட்டாயம்' தலையங்கத்தை பெற்றோர்கள் மட்டுமேன்றி ஆசிரியர்களும் கட்டாயம் படிக்க வேண்டும்.

சமீபத்தில் ஒன்பதாம் வகுப்பு மாணவி குழந்தை பெற்றெடுத்த கொடுமை நடந்திருக்கிறது. இந்நிலை தொடர்வது சமூகத்திற்குக்கேடு என்பதை நாம் அனைவரும் உணரும் தருணமிது. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம். அதற்கு விரிவான ஆலோசனை நடத்தி வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது அரசாங்கத்தின் கடமை.

- **வலம்புரிலேனா,** தஞ்சை

நவம்பர் 2024 இதழ் படித்தேன். தலையங்கத்தில் காலத்தின் கட்டாயம் என்ற தலைப்பில் எழுதியுள்ள கருத்து மிக அவசியமானது. குரு என்பவர் எவ்வளவு போற்றத்தக்கவர். ஆனால் அவர்களில் சிலர் கேவலமாக நடந்து கொள்வது அநீதியானது. எல்லாவற்றிற்கும் நாகரிக வளர்ச்சியே காரணமாகிறது. பாவலர் பூவரசி மறைமலை அவர்கள் புறநூனாற்றுப் புதையலை மீட்டுருவாக்கம் செய்து முழுமையாக ஒரு நூலாக வெளியிட்டால் சிறப்பு. புத்தகங்கள் குறித்து கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தெறிப்புகள் அருமை. பணிநிறைவு தலைமைக் கல்வி அதிகாரி பி.வி.மணி அவர்களைப் போன்று உதவும் மனப்பாங்கு கொண்டவர்களைப் போற்றுவோம். 84 அகவை காணும் எதிரொலியாரையும், 90 ஆம் அகவை காணும் பி.வெங்கட்ராமன் அவர்களையும் வணங்குகிறேன்.

- **தஞ்சை** ஹேமலதா

ஆசிரியரின் தலையங்கம் காலத்தின் கட்டாயம். சரியான செய்தி. ஊருக்கு அழகு தென்காசி தங்கராஜா. கை கொடுத்த உதவி, இரஜகை நிலவன் கவிதைகள் மனத்தில் நின்றன. வசீகரன் வணிக உத்தி சிறுகதை அருமை,

- **சி.பொன்ராஜ்,** மதுரை

ஆசிரியரின் 'காலத்தின் கட்டாயம்' அகவுரை ஆழமானது, அவசியமானது. ஒவ்வொரு பள்ளியிலும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். இதில் அரசின் பொறுப்பு மிக முக்கியமானது என்கிற ஆசிரியரின் வலியுறுத்தலை வரவேற்கிறோம். கவிஞர் வெ.சண்முகத்தின் முதற்கவிதை ஒரு முத்துக் கவிதை. கவிஞர் மலர்மகனின் உத்தமர் ஓமந்தூரார் கவிதை எப்போதும் போல் இனிக்கிறது இப்போதும்.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

'மூன்றாம் முறை முகத்தில் அறைந்தால், புத்தருக்கும் கோபம் வரும்'

– ஜப்பானியப் பழமொழி

கவிஞர் சாந்தா பாலகிருஷ்ணன், கவிஞர் ஹேமலதா, கவிஞர் தளவை இளங்குமரன், பாவலர் மேலை தமிழ்க்குமரன் ஆகியோரின் கவிதைகள் படிக்கத் திகட்டாதவை.

காம்கேர் கே.புவனேஸ்வரியின் பி.வெங்கட்ராமன் அவர்கள் பற்றிய கட்டுரை சிற்பமாய் சிறக்கிறது. நூல் மதிப்புரைக் கட்டுரைகள் அனைத்தும் நயம் பயக்கின்றன.

இதழிலும், தயாரித்த ஆசிரியர் இதயத்திலும் வீசுகிறது மனோரஞ்சித மணம்!

- **தென்காசி தங்கராஜா**

ஆறு நூல்களின் வெளியீட்டு விழா மற்றும் பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களின் 85ஆவது பிறந்த நாள் விழா படங்கள் புதுகைத் தென்றலுக்கு முன் அட்டையில் அழகாகவும், அலங்காரமாகவும் அட்டகாசமாகவும் இருந்தன. ஒவ்வொரு கவிதையும் கருத்துடன் இருந்தது.

நூல் மதிப்புரை திரையிசையில் குழந்தைப் பாடல்கள், கட்டுரைக் களஞ் சியம் மற்றும் ஜெய ஜெயகாந்தன் ஆகியவை முத்து முத்து கருத்துக்களுடன் இருந்தன. ஏழை மாணவர்களுக்கு இரக்கம் கட்டுரை தீரரும் கர்மவீரரும் தொடர், ஓமந்தூரார் பற்றிய கவிதைத் தொடர், குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா மற்றும் பி.வெங்கட் ராமன் பற்றி காம்கேர் சாஃப்ட்வேர் நிறுவனர் திருமதி புவனேஸ்வரியின் பரந்த தெளிந்த சிந்தனை பாராட்டுக்குரியது.

நெல்லையப்பர் ஒரு நல்ல மாணவர் கட்டுரை, செவிநுகர் சிந்தனைகள் போன்ற அடங்கிய செய்திகள், பார்க்க, படிக்க, ருசிக்க இதயத்தில் இருத்த, பின்பற்ற அருமை பெருமையாகும். ●



## புகழ்மாலை சூடுவோம்!

**புலவர் தி.வே.விஜயலட்சுமி**

இனிக்கின்ற நறுந்தேனாய்க் கவிதை பாடி
ஈடில்லாப் புகழ்தனையே சூடிக் கொண்டு
தனித்தநறுஞ் சுவைபோலத் தாய்நாட் டிற்கும்
தண்டமிழர் வாழ்வினுக்கும் புதுமை காட்டி
பனிக்கின்ற கீழ்த்திறத்து வாழ்வைச் சாடி
பார்மிசைநற் புகழ்பெற்று நமது நெஞ்சில்
இனிக்கின்ற பாரதியாம் கவிஞர் ஏறே!
என்றென்றும் புகழ்மாலை சூட்டு வோமே!

சக்திபரா சக்தியெனப் பாடிப் பாடி
சற்றேனும் அயர்ந்திடாமல் உழைத்த மேதை
பித்தனென மாந்தராலே இகழப் பட்டு
பற்பலரும் இழிவாகப் பிதற்றிச் செல்ல
சித்தரென வாழ்ந்திட்ட தீரச் செம்மல்!
சிறுமையைக் கண்டெழுந்தே சீறிப் பாய்வாய்!
இத்தரையில் பீடுநிறை கவிஞர் வேந்தே!
என்றென்றும் பணிந்திட்டே வழுத்தி நிற்போம்!

பாரதமே மேன்மையுறப் பாடல் பாடி
பார்மிசைநம் விடுதலைக்குப் பரிவு காட்டி
பாரதிரும் விடுதலைப்போர் முரசங் கொட்டி
பாடல்களில் பல்வேறு வித்தை காட்டி
சாரதியாம் கண்ணனுக்குக் கவிகள் பாடி
சாத்திரங்கள் சாதிமத பேயைச் சாடி
பாரிதனில் ஏற்றமிகு கவிதை யாத்த
பாரதிக்குப் புகழ்மாலை அணிவிப் போமே!